1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைகளைக் கடந்து வெற்றி பெற்றது தான் மாண்புமிகு புரட்சித்தலைவியினுடைய அரசு. எனவே இந்தக் கோர்ட்டினுடைய தடையை நீக்கி புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 473, திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

473—

ஆதிதிராவிட மக்களுக்கு விவசாயத்திற்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துத் தருதல்

*2958 திரு. ஆர். தங்கராஜ்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், ஆத்துக்குறிச்சி, ராங்கியம் காலனி ஆதிதிராவிட மககள் விவசாயத்திற்காக நீர்மூழ்கி மோட்டார் அமைத்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம் திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம், ஆத்துக்குறிச்சி காலனி ஆதிதிராவிட ராங்கியம் மக்கள் விவசாயத்திற்காக மின் மோட்டார் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆண்டி மடம் பேரூராட்சியில் உள்ள பல கிராமங்களில் ஆத்துக்குறிச்சி பெரியாத்துக்குறிச்சி, ராங்கியம், கருக்கை, நாகமந்தூர், மெலூக் திருச்சேரி, ஸ்ரீராமன் விழுதுடையான் ஆகிய கிராமங்களில் வாழ் கிற ஆதிதிராவிட மக்கள் தங்களுடைய வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக 1983 ஆம் ஆண்டு ஆழ்க் குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக, ஆழ் குழாய்க் கிணறுகளை அமைதது கொட்டகை அமைத்து பைப்லைன் போட்டிருந்தும் இதுநாள் வரையில மின் இணைப்பு வழங்கப்படாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

[1992 ஏப்ரல் 3
முற்பகல் 10-25

தமிழ்நாடு ட்யூப்வெல் கார்ப்பரேஷன் மூலமாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த அமைப்பு சரியாக செயல் படவில்லை என்ற ஒரு நோக்கத்திலே அரசே கலைத்துவிட்ட தாம். அதை தாட்கோவிலே ஹேண்ட்ஓவர் பண்ணினார்கள். ஆனால் இதுநாள் வரை அவர்களுக்கு மின் இணைப்பும், மின் மோட்டாரும் வழங்காத ஒரு சூழ்நிலை இருப்பதால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மின் இணைப்புக் கொடுப்பது மின்சார அமைச்சருடைய நிர்வாகத்திலே வருவது. ஆதி திராவிடர் அமைச்சர் அவர்களுக்கு மின் மோட்டார் வாங்கிக் கொடுப்பார். எனவே, அவரிடம் கேட்கின்ற கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) அவர் மின் இணைப்பைக் கொடுக்க வில்லை என்கிறார். மின் இணைப்புக்கு தாட்கோ விண்ணப்பம் செய்து அவர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும். மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்று சொல்வது அந்தத் தலைப்பிலே வந்துவிடும்.

<u>திரு. ஆர். தங்கராஜ்</u>: எனவே அந்தத் தொகுதியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுடைய வறுமையைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே வெகு விரைவிலே அவர்களுடைய வறுமையைப் போக்கிட அரசு மின் இணைப்பும், மின் மோட்டரும் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நமது இதய தெய்வம் டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் வந்தத் திட்டம். இந்தத் திட்டம் ஆதிதிராவிடர் மக்களின் இதய தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவர் திட்டம் இன்றைக்கு நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப் பட்டு மாண்புமிகு உறுப்பினர் விரும்புகின்ற வகையில் உறுதியாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 474, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS